# அன்புச் சகோதரிக்கு ஓர் அன்பளிப்பு

அமல் பின்த் அப்தில்லாஹ்,

தமிழில்: K.J. மஸ்தான் அலீ பாகவி, உமரி, வெளியீடு : இஸ்லாமிக் சென்டர், உனைஸா, சவுதி அரேபியா


- முன்னுரை
- உனது கதை என்ன, சொல்!
- இறையச்சமின்மை
- இறுதி கதி பற்றி சிந்திக்காதிருத்தல்
- தடுத்து நிறுத்தும் உணர்வின்மை
- ஓய்வு
- தோழிகள்
- தூண் - உறுதுணைப் பொருள்
- பொற்கூடம்


## முன்னுரை

இந்நூல் ஓர் இளம் பெண்ணின் கதையை உரையாடல் பாணியில் எடுத்துரைக்கிறது. இலக்கியத்தின் கண்ணோட்டத்தில் இது ஒரு கற்பனை என்று சொல்லி புறக்கணித்து விடமுடியாது. மட்டுமல்ல தீமைகள் மலிந்த இன்றைய சமுதாயத்தில் இதுபோன்ற நிகழ்வுகள் அதிகரித்து வரும் நிலையில் - இஸ்லாத்தின் அறிவுரைகளைப் பரவலாக்குவது ஓர் இன்றியமையாக் கடமை எனும் அடிப்படையில் பார்க்கும் போது இது ஒரு முக்கியமான பணி என்பது தெள்ளெனப்புரியும்!

நல்லொழுக்கப் போதனைகளை - அவற்றின் மாண்புகளை சாதாரண முறையில் சொல்வதை விட இலக்கிய நயத்துடன் இதயமாய் எடுத்துரைக்கிறபோது அவை மக்களின் இதயங்களில் ஆழமாகப் பதிகின்றன! இந்த வகையில் இந்நூல் ஓர் ஒப்பற்ற இஸ்லாமிய இலக்கியமாய் மிளிர்கிறது!

ஹதிய்யதீ இலைக்கி என்கிற அரபி நூலின் தமிழாக்கம்தான் இந்நூல்! இதன் ஆசிரியர் தமக்கே உரிய பாணியில், இலக்கியச் சுவை கலந்து இதனைப் படைத் துள்ளார். இந்நூல் உருது மொழியிலும் இதே பெயரில் வெளிவந்துள்ளது. அதனையும் துணையாகக் கொண்டு மூலநூலின் சுவை குன்றாத வகையில் தமிழாக்கம் அமைந்திட பெரிதும் முயன்றுள்ளேன்!

இந்நூலாசிரியர் அமல் பின்த் அப்துல்லாஹ் அவர்கள் மாணவிகளோடு நெருங்கிப்பழகிய அனுபவம் உடையவர். அதன் அடிப்படையில் இக்காலத்து இளம் பெண்கள் எத்தகைய மோசமான மனநிலைக்கும் சமூக சூழ்நிலை களுக்கும் சீக்கிரம் பலியாகி வாழ்க்கையில் தடம்புரண்டு தடுமாறுார்கள் என்பதை நேர்த்தியாய் எடுத்துரைத்து பொருத்தமான அறிவுரைகளும் தருகிறார்கள்!

ஒவ்வொரு அறிவுரைத் தொகுப்புக்கும அழகான துணைத் தலைப்பு கொடுத்து அவற்றின் கீழ் குர்ஆன் வசனங்களையும் நபிமொழிகளையும் அணிவித்திருப்பது இந்நூலின் அழகுக்கு மேலும் மெருகூட்டுவதைக் காண லாம்!

இந்நூலின் மூலம் இன்றைய மகளிருக்கு - குறிப்பாக இளம் வயது பெண்களிடையே சீரிய சிந்தனை தோன்றிட வேண்டும்., இஸ்லாமிய நெறிமுறைகள் மீது ஆழ்ந்த பற்றுதல் ஏற்பட்டிட வேண்டும்., இன்றைய நவீன உலகின் பொய் அலங்காரங்களின் பிடியிலிருந்து அவர்கள் விலகிட வேண்டும்., மேற்கத்திய நாகரிகத் தினால் சமுதாயத்தில் பெருகிவரும் சீரழிவுகள் திருத்தப்பட வேண்டும் என்பதே எமது இலட்சியமும் எதிர்பார்ப்பும்! எமது பணிகளின் மூலம் அத்தகைய பயன்கள் விளைந் திட அல்லாஹ் அருள்பாலிப்பானாக! மேலும் அவற்றைத் தூய்மையானவையாய் ஏற்றுக்கொண்டு அனைவருக்கும் மறுமைப் பேறுகளை வழங்குவானாக!

அபூ காலித் உமரி

## உனது கதை என்ன, சொல்!

---

நான் அவளைப் பார்த்தேன்., அவள் நிறம் மாறிப்போய் இருந்தாள்! முகம் மஞ்சணித்திருந்தது. ஏதோ கடுமையான சோதனை அவளுக்கு ஏற்பட்டிருக்கும்போல் தெரிந்தது. இரவு முழுவதும் தூக்கமின்றி இருந்திருக்க வேண்டும்., கடுமையான கலக்கத்துடனும் களைப்புடனும் காணப்பட்டாள்.

தனது கவலையை எவரிடமேனும் வெளிப்படுத்த வேண்டும்., உள்ளக்கிடக்கையைத் தெரிவிக்க வேண்டுமென அவள் விரும்புவது தெரிந்தது. இவ்வாறெல்லாம் அவளது முக அறிகுறிகள் உணர்த்தியதை நான் கண்ட போது அவளருகில் சென்று கூறினேன்:

அன்பு மாணவியே! நான் உன் ஆசிரியை! உன்னை வாட்டிக்கொண்டிருக்கும் கவலையென்ன என்பதை என்னிடம் சொல்! அது பற்றி யாரிடமும் எதுவும் நான் சொல்ல மாட்டேன். இதோ, உன்னைக் கவலை வாட்டுகிறது என்பது உனது முகத்திலேயே தெரிகிறதே!

அன்புள்ள மாணவியே! நாம் இருவரும் சற்று நேரம் ஓரிடத்தில் அமர்ந்து நமது துன்பங்களைப் பற்றி பேசுவோம். உனது பிரச்னைக்கு ஏதேனும் தீர்வு காண்பதற்கு நான் முயற்சி செய்கிறேன். எனக்கு நீ அனுமதி கொடு!

என் மீது நம்பிக்கை வை! நான் உன் அன்புக்குரிய சகோதரி! கருணைமிக்க தாய்! நிலைமைகளைப் புரிந்து வழிகாட்டக் கூடியவள்! உனக்கு ஏற்பட்டுள்ள கவலையும் கலக்கமும் எனக்கும் ஏற்படுவதுண்டு! உன்னைத் துன்பத்தில் ஆழ்த்தியுள்ள விஷயங்கள் என்னையும் துன்பத்தில் ஆழ்த்தியதுண்டு!

இதோ! பார்! துணிவை கைவிடாதே! உனது நிலைமையை என்னிடம் சொல்! உனது நலனுக்காக நான் தியாகமாகி விடுகிறேன்!"

அவள் நீண்டதொரு பெருமூச்சு விட்டாள். அவளது நெஞ்சு விம்மியது! பிறகு என்னை நோக்கினாள். அவளது ஒளி வீசும் கண்களிலிருந்து முத்துமுத்தாய் இரண்டு துளிகள் உருண்டு விழுந்தன!

பிறகு சொன்னாள்: 'கண்ணியமிக்க ஆசிரியை அவர்களே! எனது பிரச்னையும் என்னைப் பிடித்துள்ள கலக்கமும் பதற்றமும் வித்தியாசமானவை! நீங்கள் கேள்விப் பட்டிருக்கக்கூடிய அல்லது படித்திருக்கக் கூடிய எல்லா வகையான துன்பங்களில் இருந்தும் இவை வேறு பட்டவை!"

அப்படி என்ன பிரச்னை?"

அதைச் சொல்லவே வெட்கப்படுகிறேன்"

நான் கூறினேன்: ’அன்புக்குரியவளே! சொல்வதற்குத் தயங்க வேண்டாம்! நீ சொல்லும் செய்தியைக் கிணற்றின் ஆழத்தில் நான் போட்டுவிடுவேன்! எவராலும் அறிந்திட முடியாத இரகசியமாகவே அது இருக்கும்! "

பிறகுதான் அவள் சொல்லத் தொடங்கினாள்: ’என் அன்பு உடன்பிறப்பே! ஒரு தடவை ஓர் இளைஞன் எனது வீட்டுத் தொலைபேசியில் என்னுடன் பேசினான். அவன் குழைந்து குழைந்து உரையாடினான். நானும் அது போலவே குழைவாய்ப் பதில் சொன்னேன். அந்த இளைஞன் எனது உள்ளத்தையே கொள்ளை கொண்டுவிட்டான்.

அவன் பேசி முடித்து ரிசீவரை கீழே வைத்ததும் நான் பைத்தியம் பிடித்தவள் போல் எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன். நாளை மீண்டும் டெலிபோன் செய்வதாகச் சொன்னானே! அவன் எப்பொழுது பேசுவான்? அவன் சொன்ன நேரம் எப்பொழுது வரும்? எப்பொழுது வரும்? என்று காத்துக் கொண்டே இருப்பேன். அந்நாள் வந்ததும் அதே போன்றே மீண்டும் அவன் என்னுடன் பேசினான். இவ்வாறே எங்கள் பேச்சுகள் தொடர்ந்தன!

பிறகு ஒரு நாள் அவன் தனது காதலை என்னிடம் வெளிப்படுத்தினான். அதற்கு பதிலில் நானும் எனது அன்பையும் காதலையும் தெரிவித்தேன்!

இப்படியாக இந்த உரையாடல் தொடரவே... சிலசமயம் இரவில் நீண்ட நேரம் வரையில் டெலிபோனில் நாங்கள் பேசிக் கொண்டிருப்போம்!

இன்னொரு நாள் என்னிடம் ஒரு வேண்டுகோள் வைத்தான், அதாவது அவன் தங்கியுள்ள இடத்திற்கு நான் செல்ல வேண்டும் என்று சொன்னான். ஏனெனில் நாம் அவசியம் திருமணம் செய்து கொள்ளப்போகிறோம்., அது பற்றி இப்பொழுதே பேசிடவேண்டும்., ஓர் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் சொன்னான்!

அப்பொழுது அவன் என்னிடம் கேட்டான்: நாம் ஒருவரை ஒருவர் சந்தித்துப் பேச என்ன தயக்கம்? திருமணத்திற்கு முதலில் நீ என்னையும் நான் உன்னையும் பார்க்க வேண்டும் தானே! இதோ! பார்! நாம் இருவரும் ஒருவரை ஒருவர் விரும்பினால் நல்லது! இல்லையெனில் எதுவும் நடக்காதது போன்று விட்டு விடலாம்!

- நேரில் சந்திக்க வேண்டுமென அவன் என்னை வற்புறுத்தியபொழுது முதலில் நான் மறுத்துவிட்டேன். பிறகு அவன் என்னிடம் கூறினான்: இப்படி மறுப்பது கூட ஒருவகையில் திருமணத்திற்கு உதவக் கூடியதுதான்!

- அந்நாள்முதல் தொடர்ச்சியான மனக்கலக்கத்திற்கு நான் ஆளாகிவிட்டேன்., கவலையும் பதற்றமும் என்னை ஆட்டிப் படைத்தது!

அவன் என்னை நேசிக்கிறான்., எனது உள்ளத்திலும் அவன் மீது நேசம் பிறந்துவிட்டது!... வெட்கம்.... பழக்க வழக்கங்கள்... அவனோடு எப்படி வெளிக்கிளம்புவது என்கிற பிரச்னை... எங்களை யாரும் பார்த்துவிடக்கூடாதே என்கிற பயம் ஆகியவற்றால் ஒரே குழப்பம்! இத்தனைக்கும் என்ன காரணம்? அவன் மீதான அன்பு எனது உள்ளத்தைப் பிளந்து விட்டது தான் காரணம். என் மீது அவன் கோபமாக இருக்கிறான் என்பதைக் கேட்கவே என்னால் முடியவில்லை என்கிற நிலைக்கு நான் ஆளாகிவிட்டேன்!

அவன் என்னிடம் பேசுகிற ஒவ்வொரு தடவையும் என்னை நேரில் காண வேண்டும் என்று வேண்டிக் கொண்டிருந்தான்! நானும் அதற்குப் பல்வேறு சாக்குப் போக்குகள் சொல்லிக் கொண்டிருந்தேன்.. ! இதனால்தான் தொடர்ச்சியான மனக்கலக்கமும் பதற்றமும் என்னை அலைக்களித்துக் கொண்டிருக்கிறது!"

-அவளது கதையை நான் கேட்டபோது எனக்குச் சிரிப்பு தான் வந்தது. பசி கொண்ட அந்த ஓநாய் குறித்து ஆச்சரியம் அடைந்தேன்! எவ்வளவு சாமர்த்தியமாகப் பேசுகிறான்., நடிக்கிறான்! வெள்ளை உள்ளம் கொண்ட அப்பாவி ஆட்டை தனது சூழ்ச்சி வலையில் சிக்க வைக்கத் துடிக்கிறான்! அவன் தனது மன இச்சையைத் தீர்த்துக்கொள்ள எப்படி எப்படி இனிப்பான வார்த்தைகள் பேசி அவளை மயக்கிவிட்டான்! அந்த வார்த்தைகளில் சிறிதும் உண்மை இல்லை., அவை அனைத்தும் பச்சைப் பொய் தானே!

- எனது சிந்தனையும் திகைப்பும் நீடித்துக் கொண்டிருந்தபொழுது அவள் என் பக்கம் திரும்பிக் கூறினாள்: 'கண்ணியத்திற்குரிய ஆசிரியை அவர்களே! ஏன் எனக்கு பதில் தராமல் இருக்கிறீர்கள்? எனது பிரச்னை தொடர்பாக உங்களால் ஏதேனும் செய்ய இயலுமா?"

அதனைக் கேட்டதும் ஆழ்ந்த சிந்தனையில் இருந்து நான் விடுபட்டேன். அவள் பக்கம் திரும்பி அவளுக்கு ஆறுதல் அளித்த வண்ணம் கூறினேன்:

உனது விவகாரம் சிக்கலானது அல்ல., மிகவும் சாதாரணமானது தான்!"

இதைக் கேட்டதும் மகிழ்வுடனும் முக மலர்ச்சியுடனும் தாமதிக்காமல் என்னிடம் கேட்டாள்:

லேசானது என்று எப்படிச் சொல்கிறீர்கள்?

நான் சொன்னேன்: இன்று மாலையில் என் வீட்டிற்கு வர உனக்கு வசதிப்பட்டால் வா... இதற்கு தீர்வு காணலாம்., அல்லாஹ்வின் அனுமதியுடன்! வகுப்பு நேரம் முடிந்து மணி அடித்ததும் நீ வரலாம்! "

மலர்ந்த முகத்துடன் எழுந்து வகுப்புக்குச் சென்றாள். மாலையில் என் வீட்டுக்கு வரும் நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்!

மாலை நேரம் வந்தது. இரவு தன் இருட்திரைகளைப் பரப்பத் தொடங்கியபொழுது எனது வீட்டின் கதவு தட்டப்பட்டது.

'யார்?"

'நான்தான்., டீச்சர்!"

- நான் அவளது குரலை அறிந்து கொண்டேன். கதவைத் திறந்தேன். உள்ளே வந்தாள். ஸலாம் சொன்னாள். அவளது ஸலாத்திற்கு அதனைவிடவும் அழகிய முறையில் பதில் அளித் தேன். அவள் அமர்ந்தாள். தேநீரும் பிஸ்கட்டும் கொண்டு வந்து அவள் முன்வைத்தேன். பிறகு கூறினேன்:

'அன்புக்குரியவளே! நான் முன்பு குறிப்பட்டது போன்று உனது பிரச்னை மிகவும் சாதாரணமானது தான்!"

'அதை எப்படி சாதாரணமானது என்கிறீர்கள்? "

’இது நான் கேள்விப்படும் முதல் நிகழ்ச்சியுமல்ல., நான் தீர்ப்பு அளிக்கக்கூடிய முதல் பிரச்னையுமல்ல! இதுபோன்ற ஏராளமான நிகழ்ச்சிகள் உள்ளன! அத்தகைய சில நிகழ்ச்சிகளை சொல்கிறேன்., கேள்! அதற்கு முதலில் முன்னோட்டமாக ஒன்றை நீ தெரிந்து கொள்வது நல்லது!

எந்த ஒரு விஷயமானாலும் அதில் அல்லாஹ்வைப் பற்றிய அச்சம் இல்லையானால்- அல்லாஹ் வழங்கிய ஷரீஅத் நெறி முறைக்கு முரணாக அது செய்யப்பட்டிருந்தால்- அல்லாஹ் விலக்கிய தீமைகள் செய்யப்பட்டிருந்தால் அந்த விஷயம் இவ்வுலகிலும் சீரழிவைத்தான் தரும்., அப்படிச் செய்பவருக்கு மறுமையிலும் தண்டனை உண்டு என்று எச்சரிக்கையும் விடுக்கப்படுகிறது!

இப்பொழுது ஒரு நிகழ்ச்சியை உனக்குச் சொல்கிறேன். உன்னைப்போலவே நல்லுள்ளம் கொண்ட ஒரு பெண் இருந்தாள். டெலிபோனில் பேசுவதன் மூலம் ஓர் ஆடவனுடன் அவளுக்குத் தொடர்பு ஏற்பட்டது! அந்தத் தொடர்பு நீடித்துக்கொண்டே வந்தது! இறுதியில் அவன் அதற்குக் காதல் எனப் பெயர் சூட்டிக்கொள்ளும் வகையில் உச்ச நிலையை அடைந்தது!

பிறகு தன்னோடு வெளிக்கிளம்ப வேண்டுமென அவளிடம் அவன் வேண்டினான்! அதற்கு அவள் அப்புறம்- இப்புறம் என்று சொல்லித் தட்டிக்கழித்தாள். ஆனாலும் இறுதியில் அவனுடன் அவள் வெளிக் கிளம்பியே விட்டாள்!

இருவரும் ஒரு காரில் பயணித்தார்கள். அவன் சிக்ரட் குடித்தான். அது சாதாரணமான சிக்ரட் அல்ல., போதைப் பொருள் கலந்தது!

அதன் பிறகு என்னவெல்லாம் நடந்தது என்று அந்தப் பெண்ணுக்கு எதுவும் தெரியாது. அவளுக்குத் தன்னுணர்வு வந்த போது தனது வீட்டு வாசல் முன் நின்று கொண்டிருந்தாள்! அவளது கற்பு பறிக்கப்பட்டிருந்தது! தவறான முறையில் கர்ப்பம் தரித்திருந்தாள்! பிறகு கேவலமாகிவிடுமே என அஞ்சி தற்கொலை செய்துகொண்டாள்! -ஓர் அப்பாவி ஆட்டின் மீது அநீதி இழைத்த ஓநாயின் கதைபோன்றதாகும் இது!

## மற்றொரு நிகழ்ச்சி!

ஓர் ஆடவன் அப்பாவிப் பெண்ணொருத்தியுடன் டெலிபோனில் உரையாடினான். இனிக்க இனிக்கப் பேசி அவளை மயக்கினான். பிறகு தன்னோடு வெளிக்கிளம்ப வேண்டுமென அவளை வற்புறுத்தினான். ஆனால் அந்தப்பெண் மறுத்தாள்., தனது மானத்தையும் கௌரவத்தையும் பாதுகாத்திட வேண்டுமென்பதில் அவள் உறுதியாக இருந்தாள்! ஆம்! அவளது கௌரவமும் உயர்வும் அவளைக் காப்பாற்றியது! அந்த ஆடவனின் பேச்சை அவள் நம்பவில்லை!

பிறகு அவன் என்ன செய்தான்? ஒரு குருட்டுத் தனமான நம்பிக்கையை அவளுக்கு ஊட்டினான். அவன் சொன்னான்:

’அதுவெல்லாம் ஒரு ஜாலியான பொழுது போக்குதான்., தோழிப் பெண்ணை அழைத்துக்கொண்டு நீ ஜாலியாகப் புறப்படுவது போன்றதுதான்" எனச்சொல்லி அவளை நம்பவைத்தான்! பிறகு அவளது கையைப் பிடித்துக்கொண்டு புறப்பட்டான்! தனி இடத்துக்கு அவளைக் கொண்டு சென்றான்! என்னை எனது வீட்டில் கொண்டு வந்து சேர்த்துவிடு என்று துணிவோடு அவள் சொல்லத்தான் செய்தாள்., ஆனால் அவன் மறுத்து விட்டான்! பிறகு...?கண்ணிய மிக்கவளே! இதுபோல இன்னும் பல நிகழ்ச்சிகள்!

ஆகையால் அன்புக்குரியவளே! நீ எவ்வளவுதான் உறுதி மிக்கவளாக- புத்தி கூர்மையானவளாக இருந்தாலும் - அந்த ஆடவன் எவ்வளவுதான் உண்மையானவனாக இருந்தாலும்.. ஒன்றை நீ புரிந்து

கொள்ள வேண்டும். இத்தகைய இழிச்செயல்களுக்கு நாளை மறுமையில் நிச்சயம் தண்டனை உண்டு என அல்லாஹ் எச்சரிக்கை செய்துள்ளான். நீ அந்த ஆடவனுடன் வெளிக்கிளம்பாதிருக்க இது ஒன்றே போதுமே!

மேலும் ஓர் அந்நிய ஆடவனுடன் வாய்மையான பழக்கவழக்கங்களை அன்பான தொடர்புகளை அமைத்துக் கொள்ளலாம் என்கிற எந்த ஓர் ஆர்வத்துடிப்பு உன் உள்ளத்தில் உள்ளதோ அது வெறும் மாயைதான்! லேசான காற்று அதனை அடித்துச் சென்றுவிடும்! அது கண்களை மருட்டும் கானல் நீர்தான்! நீ அதன் அருகில் சென்றால் எதனையும் காணமுடியாது! இந்த உண்மை நிலையை நீ அறிந்துகொள்ள வேண்டும்!"

பிறகு நான் அவளை நோக்கித் திரும்பினேன். அவளது மன அமைதிக்காக மேலும் சொன்னேன்:

'என் அன்புத் தங்கையே! அழுது அழுது கண்ணீர் வடிப்பதால் எந்தப் பயனும் இல்லை. விஷயம் உனது கையில் உள்ளது. திருந்துவதற்கான முழு அவகாசம் உனக்கு அளிக்கப்பட்டுள்ளது. உனக்கும் உன்னைப் போன்ற பெண்களுக்கும் நான் சொல்வது என்னவெனில், வேட்டை வெறியுடன் அலையும் பசி கொண்ட ஓநாய்கள் குறித்து நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். உங்களது உடலை நீங்களே பாதுகாத்துக் கொள்ள வேண்டும்!

ஆட்டுக்குட்டியை ஓநாய் எங்கே கவ்விச் சென்று கொன்று விடுமோ என்று அதிகம் அஞ்சப்படுகிறதெனில் ஒரு பெண்ணின் வாழ்வை ஆடவன் எங்கே பறித்து பாழ்படுத்தி விடுவானோ என்று எச்சரிக்கையுடன் இருக்கத்தான் வேண்டும்.

உண்மையாதெனில் அவன் அவளது கண்ணியத்தையும் சிறப்பையும் பறித்துக் கொண்டு அதற்குப் பதிலாக இழிவைக் கொடுக்கிறான். அவளது சுவனத்தைப் பறித்துக்கொண்டு நரகத்தைக் கொடுக்கிறான். அவளது அறிவைப் பறித்துக்கொண்டு அவளைப் பைத்தியக்காரியாக ஆக்கிவிடுகிறான்!

எத்துணை துரோகிகள், இந்தப் பயல்கள்! இவர்களை ஏறிட்டுப்பார்க்கலாமா? அதற்கு அருகதையுள்ளவர்களா இவர்கள்?

இதனால்தான் நம்பிக்கையாளர்களின் அன்னையர் என்று போற்றப்படும் நபிகளாரின் துய்மைமிகு துணைவியரை நோக்கி இறைவன் கூறுகிறான்:

(நபியின் மனைவியரே!) நீங்கள் இறைவனுக்கு அஞ்சுகிறீர்கள் எனில் குழைவாகப் பேசாதீர்கள்! ஏனெனில் உள்ளத்தில் கெட்ட எண்ணத்தை கொண்டுள்ள எவரேனும் சபலம் கொள்ளக் கூடும்! ஆகவே தெளிவாய் நேர்த்தியாயப் பேசுங்கள்!" (33 : 32)

அப்படியானால் நமது நிலை என்ன? நமது அறிவோ மழுங்கிப் போய்விட்டது. நமது தீன் - இறைமார்க்கப்பற்று நம்மிடமிருந்து விடைபெற்றுச் சென்றுவிட்டதே! நபிகளாரின் தூய மனைவியரின் அறிவுக்கு எதிரில் நமது அறிவு, கடலுக்கு எதிரில் ஒருதுளி நீர் போன்றதுதானே!

### என் அன்புக்குரியவளே!

இதனால்தான் நம்முடைய சகோதரிகள் அனைவர்க்கும் நான் எச்சரிக்கை விடுக்கிறேன்! சிறிது கற்பனை செய்து பாருங்கள்! ஓர் ஆடவனின் பேச்சை ஒரு பெண் நம்பி முதல் தடவையாக அவனுடன் அவள் பயணித்தால் இரண்டாவது தடவையும்... மூன்றாவது தடவையும் பயணித்தாள் எனில்...இப்படியே இது தொடர்ந்தால் அந்தப் பெண் எவ்வளவு பதற்றத்திற்கும் கலக்கத்திற்கும் ஆளாக நேரிடும்!

இவ்வாறு ஓர் ஆடவனுடன் ஒரு பெண் வெளியே செல்வதன் விளைவு என்னவாகும்? அவளது சிறப்பும் கண்ணியமும் பாழ்பட்டுப்போகும் அல்லவா?

மேலும் எந்தச் செயலை அவள் சாதாரணமாகக் கருதிக் கொண்டிருந்தாளோ அந்தச் செயலை ஷைத்தான் மேலும் மேலும் அலங்காரமாக்கி அவளை மேலும் தூண்டிவிட்டான் என்றால் பிறகு அவளது வீட்டிலுள்ளோருக்கு அது பற்றித் தெரிய வரும்., விளைவு என்னவாகும்? அப்பொழுதே அவளைக் கொன்று விடவேண்டும் என்றுதான் அவர்களுக்குத் தோன்றும்! வேறு எந்த ஒரு தீர்வும் அவர்களுக்குப் புலப்படாது!

ஆகையால்... என் கண்ணியத்திற்குரியவளே! கேடுகெட்ட இந்தத் துரோகிகளிடம் நீ ஏமாந்து விடாதே! ஏனெனில் இவர்கள் உன்னிடம் மென்மையாகப் பழகுவது போல் காட்டிக் கொள்வார்கள். பார்ப்பதற்கு அப்பாவி ஆடு போல் இருப்பார்கள்., ஆனால் ஓநாய் போல் வெறி கொண்டது இவர்களின் உள்ளம்!

என் அன்புச் சகோதரியே! மறுமை பற்றி - இறைவன் கேள்வி-கணக்கு கேட்கவிருப்பது பற்றி இவர்களின் இதயத்தில் எவ்வித அச்சமும் இல்லை! ஆகையால் தங்களின் மன இச்சைப்படி ஷைத்தானின் வழியில் இவர்கள் சென்று கொண்டிருக்கிறார்கள்!

ஆனால்... ! என் கண்ணியத்திற்குரியவளே! இந்தப் பருவ வயதுப் பெண்களும் ஆண்களும் தமது செயலின் பின் விளைவு குறித்து என்ன அபிப்பிராயப்படுகிறார்கள் என்று எப்பொழுதாவது நீ சிந்தித்துப்பார்த்தாயா?

ஓர் இளைஞன் சிந்திப்பது இதுதான்: உடலில் இருந்த கழிவுப் பொருள் ஒன்றை வெளியேற்றிவிட்டேன்., அசுத்தமான இடத்தில் அதனை அப்புறப்படுத்தி எறிந்து விட்டேன்! இந்த ரகசியம் வெளிப்பட்டால் கூட ஒன்றும் ஆகிவிடப்போவதில்லை! பாவமீட்சி தேடிக் கொண்டால் போகிறது!,,

இந்தச் சமுதாயம்கூட அவனைக் குற்றமற்றவனாகத்தானே கருதுகிறது!

- இளமைத்துடிப்பில் ஏதோ செய்துவிட்டான்., இப்பொழுதுதான் பாவமீட்சி தேடிக்கொண்டானே!
- அறியாப்பருவத்திலுள்ள வாலிபன்., இப்பொழுதுதான் தனது செயல்குறித்துப் பச்சாதாபப்படுகிறானே! வேறென்ன!
- சிறு பருவம்., அவனை ஷைத்தான் வழி கெடுத்து விட்டான்.. பாவன்னிப்புத் தேடிவிட்டானல்லவா? பிறகென்ன?
- சிறு பிள்னை., சிற்றின்ப மோகத்தில் வீழ்ந்து விட்டான். இப்பொழுது தான் மனம் திருந்திவிட்டானே!

- இதேபோல இன்னும் பல சாக்குப்போக்குகள்., அந்த இளைஞர்களுக்குச் சாதகமாக!

என் அன்புத் தங்கையே! அவனது வாக்குறுதி உண்மையானது தான்., உண்மையில் அவன் திருமணம் செய்யத்தான் விரும்பினான் என்றே வைத்துக் கொள்வோம். ஆனால் அந்தத் திருமணம் எதிர்காலத்தில் வெற்றிகரமாக அமையும் என்று நீ உறுதியாக நம்புகிறாயா?

கண்டிப்பாக அப்படி அமையாது! இறைவன் அவ்வாறு நாடினாலே தவிர! ஏனெனில் சீக்கிரம் அவனது உள்ளத்தில் ஒரு சந்தேகம் வரும்., எந்தப் பெண் தன்னுடைய வீட்டினரை ஏமாற்றினாளோ அந்தப் பெண்., முதல் தடவையாகத் தான் என்னுடன் ஓடிவந்திருக்கிறாள் என்றாலும் இனிவரும் நாட்களில் அவள் என்னையும் ஏமாற்றலாம்தானே! எனவே என்னைத் தவிர வேறு ஆடவர்களுடன் அவளுக்குத்

தொடர்பு இருக்கத்தானே செய்யும் -இதுபோன்ற சிந்தனையிலேயே இரவு பகல் எந்நேரமும் அவன் மூழ்கி இருப்பான்!

இப்படி எண்ணுபவன் அவளது டெலி:ஃபோனை கண்காணித்துக் கொண்டிருப்பான். அவனது மனதில் சந்தேகம் வலுப்பெற்றுக் கொண்டேயிருக்கும். தன்னுடைய குழந்தைகள் விஷயத்தில்கூட சந்தேகப்படத் தொடங்கும் அளவுக்கு அது விபரீதம் ஆகிவிடும்!

அந்தப் பெண் ஏதேனும் தவறு செய்தது பற்றி எந்த ஆதாரமும் அவனுக்குக் கிடைக்காவிட்டால் கூட அந்தச் சந்தேகம் நிற்காது., தொடர்ந்து வளர்ந்துகொண்டு தான் இருக்கும்! அதன் விளைவு மணவிலக்கில் போய்தான் முடியும்! அது, அந்தப் பெண்ணின் வாழ்வைப் பாதியிலேயே அழித்துவிடும்!

கைதாகி சிறையில் இருந்த இளைஞர்கள் சிலரிடம் ஒரு நேர்காணல் நடத்தப்பட்டது. அது பற்றிய அறிக்கையில் இந்த விவரம் தெரியவந்துள்ளது. (அந்த இளைஞர்கள் அனைவரும் தங்களின் விருப்பப்படி டெலி:ஃபோன் மூலம் வாழ்க்கைத் துணைகளைத் தேடிக் கொண்டவர்கள். அந்தப் பெண்களும் அவர்களுடன் ஓடிவந்திருந்தார்கள்) அந்த இளைஞர்களிடம் கேட்கப்பட்டது:

'நீங்கள் உண்மையில் அந்தப் பெண்களில் யாரையாவது திருமணம் செய்துகொள்ள விரும்பினீர்களா?"

அதற்கு அவர்கள் அனைவரும் அளித்த பதில் இதுதான் : 'நாங்கள் அப்படி விரும்பவில்லை. ஏன், இந்தப் பெண்களின் உறவுக்காரப் பெண்ணைக்கூட நிச்சயதார்த்தம் செய்வதற்கு நாங்கள் தயாராக இல்லை. இத்தகைய பெண்கள் வெறும் விளையாட்டுப் பொம்மைகள்தாம்! அவர்களுடன் நாங்கள் விளையாடுகிறோம்., குழந்தைகள் பொம்மைகளுடன் விளையாடுவது போன்று! அலுப்புத்தட்டி விட்டால் பொம்மைகளைக் குழந்தைகள் எறிந்து விடுகின்றன! நாங்களும் அப்படித்தான்! போர் அடிக்கும்போது அந்தப் பெண்களிள் உறவை முறித்துக் கொள்வோம். எங்களுக்கு அதைப் பற்றி எந்தக் கவலையும் இல்லை! எங்களுக்கு எந்த நஷ்டமும் ஏற்படாது. அப்பொழுது அவர்களின் நிலையை அவர்கள் கவனித்துக் கொள்ள வேண்டியதுதான்!"

'நீங்கள் இன்பம் அனுபவித்தது போல் அந்தப் பெண்களின் நலனிலும் அக்கரை கொள்ளத்தானே வேண்டும்"

இறைவன் மீது சத்தியமாக! வழியில் கிடக்கும் பொருளை விடக்கூடுதலாக எந்த மதிப்பையும் அந்தப் பெண்ணுக்கு நாங்கள் கொடுக்க மாட்டோம். சமுதாயத்தின் பார்வையில் அவள் கண்ணியம் இழந்துவிட்டாள். சமுதாயத்திலேயே அவள்தான் புத்திசாலிப் பெண்., அழகுமிக்க பெண் என்கிற கருத்தை நாங்கள் வெளிப்படுத்தினாலும் அவளைத் தரம் தாழ்ந்தவளாகவே கருதுகிறோம். எந்த அளவுக்கு என்றால் ஓர் அடிமை போன்றே அவளை நாங்கள் பாவிக்கிறோம். விருப்பப்படி அவளிடம் நடந்து கொள்ளலாம் என்று!"

இன்னோர் ஆய்வில் ஓர் இளைஞனிடம் அவனுடன் பழகும் இளம் பெண்ணைப் பற்றி கேட்கப்பட்ட பொழுது அவன் கூறினான்: கடலில் முத்துக் குளிப்பவனைப் போன்றுதான் நானும்! சிப்பியைத் திறக்கிறேன்., அதிலிருந்து முத்தை எடுக்கிறேன்., பிறகு தூக்கி எறிந்துவிடுகிறேன்!"

-புத்திசாலிப் பெண்ணே! இவ்வாறாக, பாவத்தில் ஈடுபடவைக்கும் இந்த இளைஞர்களின் சிந்தனைப் போக்கு என்ன என்பதை நான் அறிந்து கொண்டேன். தங்களது இச்சையைச் சீக்கிரம் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் இவர்களின் ஒரே எண்ணம்! அதன் விளைவோ பெண்ணின் தலையில் வந்து விடிகிறது!- இந்த அறிக்கையைப் படித்துக் கொண்டிருந்த பொழுது இமாம் இப்னு ஹஸ்ம் (ரஹ்) அவர்கள் கூறிய கருத்து எனது நினைவுக்கு வந்தது!

விபச்சாரம் செய்பவன் அனைத்திற்கும் முதலில் யாரை இழிவாகப் பார்க்கிறானெனில் எந்தப் பெண்ணிடம் அவன் விபச்சாரம் செய்தானோ அந்தப் பெண்ணைத்தான்!"

இந்த மானக்கேடான செயலினால் அந்த இளம்பெண்ணுக்கு ஏற்படும் விளைவுகள் - தடுமாற்றமும் கலக்கமும் பதற்றமும் தானே! இழிவுக்கும் கேலிப் பேச்சுக்கும் அவள் அஞ்சவேண்டியதிருக்கிறது! அந்த விஷயம் தாய் தந்தைக்கு எங்கே தெரிந்துவிடப் போகிறதோ என்று அஞ்சுகிறாள்! சகோதரர்களுக்கு அஞ்சுகிறாள். அந்த ஆடவனுடன் வெளிக்கிளம்பினால் சமுதாய மக்களுக்கு அஞ்ச வேண்டியதிருக்கிறது! திருமணம் தொடர்பாக அவன் என்ன சொன்னான் என்பதற்கு எந்தச் சான்றும் இல்லை!

அவனது திருமணப் பேச்சை அவள் மூட்டை கட்டி வைக்க நேரிடுகிறது! ஏனெனில் அவளுக்குத் திருமணம் நடந்து அவளுடைய கணவருக்கு இவளது பழைய போக்குத் தெரியவந்தால் அதன் விபரீதம் என்னவாகும்? பேரிழப்பாகவே முடியும்!

பிறகு அவள் என்ன செய்வாள்? அவளது பகல், பகலாக இருப்பதில்லை., அவளது இரவு, இரவாக இருப்பதில்லை! நிம்மதியே கிடைப்பதில்லை! சிறகு ஒடிக்கப்பட்ட பறவை போல் அவள் ஆகிவிடுகிறாள்! பிறகு அவள் என்ன செய்வாள்?

அந்தப் பெண் எவ்வாறு சிந்திப்பாள் என்று நீங்கள் கருதுகிறீர்கள்? தற்கொலை செய்து கொண்டு தனக்குத் தானே பழிதீர்த்துக் கொள்ளலாமா என்று தான் சிந்திப்பாள்! சீக்கிரம் இந்த உலகத்தில் இருந்து விடைபெற்றுச் சென்றுவிட வேண்டும் என்று துடிப்பாள்! மரணமே! வா! என்றழைப்பாள்! செத்து மடிந்து விட்டால் நல்லதே என்று!

இப்படிப்பட்ட எத்தனையோ பருவப் பெண்கள் தற்கொலை செய்து கொண்டு தங்களைத் தாங்களே அழித்துக்கொள்கின்றனர்!

இன்னும் சில பெண்களை அவர்களின் தந்தையே கொன்று விடுகிறார்கள்!

சில பெண்களை அவர்களின் சகோதரர்கள் கொன்று விடுகிறார்கள்!

இன்னும் இப்படிப்பட்ட எத்தனையோ பெண்களுக்குப் பைத்தியம் பிடித்து விடுகிறது! அறிவை இழந்து விடுகிறாள்! இப்பொழுது அவர்கள் மனநல மருத்துவ மனைகளில்!

இன்னும் எத்தனையோ இளம்பெண்கள் தங்களைத் தாங்களே கத்தியால் குத்திக்கொள்கின்றனர்! இப்பொழுது அவர்கள் மரணத்தின் பிடியில்! -இவற்றிற்கெல்லாம் என்ன காரணம்? டெலி∴போன் பேச்சுதான் காரணம்!

இத்தகைய பெண்கள் அற்பமான இன்பத்திற்கு அவசரப்பட்டு ஈருலகிலும் இழிவுக்கும் கேவலத்துக்கும் ஆளாகிவிட்டனரே!

இவைதான் இந்தச் செயலினால் விளையும் விளைவுகள்! எனவே மானமிகு மங்கையே! இந்தக் கேவலமான மனிதர்களை நீ நிராகரித்திடவேண்டும். இவர்களின் பேச்சை நம்பக்கூடாது! இவர்களின் கண் பார்வையில் நீ படக்கூடாது!

ஆனால் மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட முறையில் அமைதி மற்றும் நிம்மதியின் நிழலில் - அன்பு, தூய்மை, கற்பு ஆகியவற்றின் படிவில் இஸ்லாம் அனுமதித்துள்ள முறையான திருமண நிச்சதார்த்தத்தின் அடிப்படையில் நீ ஆடவர் முன்னால் வரலாம்! மணம் புரிய விரும்பும் ஆண், தனக்கு நிச்சயதார்த்தம் பேசப்பட்ட பெண்ணைத் திருமணத்திற்கு முன்னால் பார்ப்பதை இஸ்லாம் அனுமதித்துள்ளது! ஏனெனில் அது அவர்களுக்கிடையே இணக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகும். நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள் :

நீ அந்தப் பெண்ணைப் பார்த்துக் கொள்! திண்ணமாக அது, உங்களிடையே இணக்கத்தை ஏற்படுத்துவற்கு ஏற்றதாகும்!" (அறிவிப்பாளர்: மு∴கீரா பின் ஷு அபா (ரலி) நூல் : நஸாஈ, திர்மிதி, தாரமி, இப்னு மாஜா)

- அவள் எனது பேச்சை இடைமறித்துக் கொண்டு என்னை நோக்கினாள். அழுகையும் ஒப்பாரியும் அவளது நெஞ்சை விம்மச் செய்தது. அவளது கன்னங்கள் நெடுகிலும் கண்ணீர்த்துளிகள்! - அவள் சொன்னாள்:

கண்ணியத்திற்குரிய ஆசிரியை அவர்களே! அல்லாஹ்வின் மீது சத்தியமாக! ஆழ்ந்த தூக்கத்தில் இருந்த என்னை நீங்கள் விழித்தெழச்செய்தீர்கள்! மிகப்பெரிய அலட்சியத்திலிருந்து என்னை விடுவித்தீர்கள்.... !

ஆனாலும் என் கண்ணியத்திற்குரிய ஆசிரியை அவர்களே! என்னையும் என்னைப்போல் பல இளம் பெண்களையும் இது போன்ற அலங்கோலத்திற்கு இட்டுச்செல்பவை எவை? இதன் தொடக்கம் இலகுவானதாகவும் முடிவோ சிக்கலும் பெரும் அபாயமும் நிறைந்தும் உள்ளதே!"

நான் அவளுக்குப் பதில் அளித்தேன்: இதற்கான காரணம் பின் வரும் ஒரு சில விஷயங்களே ஆகும்!,,

## இறையச்சமின்மை!

பருவ வயதுப் பெண் எவ்வாறு சிந்திக்கிறாள்? அவளைக் கண்காணித்துக் கொண்டிருப்பவர்கள் அவளுடைய பெற்றோர் மட்டும் தான். அல்லது அவளுடய சகோதரர்கள் மட்டும்தான். அல்லது அவளுடைய சமுதாயத்தினர் மட்டும்தான் என்று கருதுகிறாள். இந்நிலையில் அவள் தனது அறைக்கதவுகள் அனைத்தையும் அடைத்துக்கொள்கிறபோது, கண்காணிப்பின் அனைத்து வாசல்களும் அடைபட்டுப் போய்விட்டன., அறையில் நாம் மட்டும் தான் இருக்கிறோம் என்றுதான் எண்ணுகிறாள்!

இதனடிப்படையில் அவளது டெலி∴போன் உரையாடல் தொடர்கிறது! தன்னை யாருமே பார்க்கவில்லை எனும் இறுமாப்பு அவளுக்கு! ஆனால் அவளைப் படைத்தவனும் அதிபதியும் எஜமானனுமான இறைவன் கண்காணித்துக் கொண்டிருக்கிறான் என்பதை மறந்து விடுகிறாள்!

அந்த இறைவன் குர்ஆனில் கூறுகிறான்:

திண்ணமாக அவன் ரகசியமாகப் பேசுவதையும் அதைவிட மறைவானதையும் அறிகிறான்" (20:7)

வேறோர் இடத்தில்,

திண்ணமாக அவன் வெளிப்படையானதையும் மறைவான தையும் (அனைத்தையும்) அறிகிறான்" (87:7)

இன்னோர் இடத்தில் கூறுகிறான்:

மேலும் நீங்கள் எங்கிருந்தாலும் அவன் உங்களுடன் இருக்கிறான்" (57:4) அதாவது அவன் தனது அறிவு ஞானத்தைப் பொறுத்தும் கேட்கும் பார்க்கும் ஆற்றல்களைப் பொறுத்தும் உங்களுடன் இருக்கிறான்!

மேலும் ஓரிடத்தில் கூறுகிறான்:

நாமே மனிதனைப் படைத்தோம். அவனது உள்ளத்தில் எழுகிற ஊசாட்டங்களைக்கூட நாம் அறிகிறோம். மேலும் அவனது பிடரி நரம்பை விடவும் நாம் அவனிடம் அதிக நெருக்கமாக இருக்கிறோம்'' (50:16)

அல்லாஹ்வின் கண்காணிப்பு குறித்து அந்தப்பெண் அலட்சியமாக இருக்கும்போது இந்தச்செயலைச் செய்கிறாள்! இந்நிலைக்கு அவளைக்கொண்டுவருவது யாதெனில் அல்லாஹ்வைக் குறித்து அவள் நாணமற்று விடுவதுதான்! இதனால்தான் நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்:

அல்லாஹ்தான் மிகவும் தகுதியுடையவன்., அவனைக் குறித்து நாணப்படுவதற்கு!''

அன்புச் சகோதரியே! இறைவன் கண்காணித்துக் கொண்டிருக்கிறான் என்கிற எண்ணம்தான் - இறைவனுக்கு அதிருப்தி உண்டாக்கும் எந்த ஒரு செயலையும் நீ செய்யாதிருக்கும் நிலையை உன்னுள் ஏற்படுத்துகிறது!

நீ பேசுவதை இறைவன் கேட்டுக் கொண்டிருக்கிறான்., நீ இருக்கும் இடத்தையும் சூழ்நிலையையும் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பதை நீ அறிந்தால்-

ஒரு விநாடி கூட உன்னைக் குறித்து அவன் கவனமற்றவனாக இல்லை. ஏனெனில் அவன் தூங்குவதுமில்லை., சிற்றுறக்கமும் அவனைப் பீடிப்பதில்லை'' (குர்ஆன் 2:255) என்பதை நீ அறிந்தால் அவனுக்குக் கோபமூட்டக் கூடிய எந்தச் செயலையும் நீ செய்யமாட்டாய்!

ஆக! அவனது கட்டளைக்குப் புறம்பாக இந்தச் செயலில் நீ ஈடுபட்டிருப்பதை அவன் பார்க்கிறான். பிறகும் கூட அவன் உன் மீது அருள்மாரிப் பொழிகிறான். நீ உனது மானம் எனும் ஆடையைக் கிழித்துக் கொண்டிருக்கிறாய். ஆனால் அவனோ உனது பாவத்தை மறைத்து உனக்குக் கண்ணியம் அளிக்கிறான். அதன் பிறகும் கூட நீ அவனை அலட்சியமாகக் கருதுகிறாய்!

ஆகையால் என் அன்புச்சகோதரியே! இறைவனுக்கு நாம் எவ்வாறு அஞ்சவேண்டுமோ அவ்வாறு அஞ்சினால் இத்தகைய இழிவுக்கு ஆளாகி பதற்றம் அடையும் நிலை வராது!

இதோ! பார்! டாக்ஸியில் உன் தகப்பனாருடன் நீ அமர்ந்திருக்கும் போது பர்தா அணிந்து கொள்கிறாய், இல்லையா! ஆனால் தகப்பனார் இல்லையெனில் டிரைவரின் எதிரில் பர்தா அணியாமல் இருக்கலாமா? பர்தா அணிவது தாய் தந்தைக்குப் பயந்து தானே தவிர., அல்லாஹ்வுக்குப் பயந்து அல்ல என்பது தானே இதன் அர்த்தம்! அப்படியானால் நீ எது செய்தாலும் அல்லாஹ்வுக்கு அஞ்சமாட்டாய்!

ஆனால் அல்லாஹ் கடுமையான ரோஷமுடையவன்! எந்தக் காரியங்களைச் செய்யக்கூடாதென விலக்கினானோ அந்தக் காரியங்களைக் குறித்து ரோஷம் அடைகிறான்! எனவே நாம் அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்திட வேண்டும். அல்லாஹ் கூறுகிறான்:

நீங்கள் அவர்களுக்கு அஞ்சாதீர்கள்.,எனக்கே அஞ்சுங்கள்!''(2:150)

வேறோர் இடத்தில்,

நீங்கள் மக்களுக்கு பயப்படாதீர்கள். எனக்கே பயப்படுங்கள்!'' (3:175)

அபுல் அதாஹிய்யா எனும் அரபுக் கவிஞர் மிக அழகாகப் பாடினார்:

'நீ

தனிமையில் இருக்கும் நேரம் - நான்

தனியே ஆகிவிட்டேன் எனச் சொல்லாதே! ஒருவன்
என்னைக் கண்காணிக்கிறான் எனச் சொல்!

இறைவன் விநாடிப்பொழுதேனும் கவனமின்றி
இருப்பான் என்று கருதிவிடாதே!
அவனறியாத ரகசியமும் உண்டென
எண்ணிவிடாாதே!"

## இறுதிக் கதி பற்றிச் சிந்திக்காதிருத்தல்

நிச்சயமாக உலக வாழ்வுக்கு ஒரு முடிவு உண்டு. கால அவகாசம் வரையறுக்கப்பட்ட ஒன்றாகும். மேலும் ரிஜ்க் எனும் உணவாதாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுவிட்டது. இந்த விஷயங்கள் அனைத்திலும் அல்லாஹ் முழு அதிகராம் உடையவன் ஆவான்! இவையே உண்மையெனெ முஸ்லிம்களாகிய நாம் உளப்பூர்வமாக ஏற்றுக் கொண்டுள்ளோம். இவ்வாறு ஏற்றுக் கொண்டது இறைவன் நம்மீது புரிந்த பேருபகாரமாகும்!

மானமிகு மங்கையே! இந்தப் பாவச்செயலுக்குப் பிறகு அதன் இறுதி கதி எவ்வாறு முடியும் என்று நீ எப்பொழுதாவது சிந்தித்துப்பார்த்தாயா? மரணம் திடீரென வருகிறது! திடுமென நம்மைப் பிடித்துக் கொள்கிறது என்பதை நீ அறியமாட்டாயா?

எத்தனையோ மணப்பெண்கள் அலங்காரம் செய்விக்கப்பட்டு (மணவறைக்குள்) அனுப்பி வைக்கப்பட்டார்கள். அவர்களின் மணமகன் அவர்களிடம் வருவதற்கு முன்பே அவர்களின் ஆயுள் முடிந்து விடுகிறது!

நான் ஒரு நிகழ்ச்சியைச் சொல்கிறேன்: 'ஓர் ஆடவன் ஒரு பெண்ணுடன் தகாத உறவில் ஈடுபட்டான். அவர்கள் இருவரின் தொடர்பும் தொலைபேசியின் மூலம் தான் ஏற்பட்டது! பிறகு அவளை அவன் அவளது வீடு வரை கொண்டுவந்து சேர்த்தான். அவள் வாசலின் அருகில் நின்றிருந்தாள். திடீரெனக் கீழே சாய்ந்தாள்! அதுவே அவளது கடைசிச் சரிவு!... ! அந்தோ! திடீரென மரணத்தின் பிடியில் சிக்கிவிட்டாள்!

அறிவுத் திறன்மிக்கவளே! இந்தப் பெண் அந்த ஆடவனுடன் காரில் போய்க் கொண்டிருக்கும் பொழுது அவளது உயிர் கைப்பற்றப் பட்டிருந்தால் அவளது கதி என்னவாகி இருக்கும் என்பதை நீ சிந்தித்துப் பார்த்தாயா?

ஒரு மீட்டர் அகலமும் இரண்டு மீட்டர் நீளமும் உடைய இருள் சூழ்ந்த மண்ணறையில் அவள் வைக்கப்படும் பொழுது அவள் என்னதான் செய்வாள்? அந்த மண்ணறை நரகப்படுகழிகளுள் ஒன்றாக இருக்குமா? சுவனத்தோட்டங்களுள் ஒன்றாக இருக்குமா?

மனிதர்கள் அனைவரும் மறுவுலகில் எழுப்பப்பட்டு இறைவன் திருமுன்னால் ஒன்று திரட்டப்பட்டிருக்கும் நிலையில் இந்தப் பெண்ணின் கதி என்னவாகும்? இவள் தனது வினைப் பட்டியலை வலது கரத்தால் பெறுவாளா? இடது கரத்தால் பெறுவாளா?

இறைவன் கூறுகிறான்:

தாங்கள் செய்தவை அனைத்தும் தங்கள் முன்னால் இருப்பதை அவர்கள் காண்பார்கள். மேலும் உம் அதிபதி எவருக்கும் சிறிதும் அநீதி இழைக்க மாட்டான்!" (18:49)

மற்றோர் இடத்தில்,

'வினைப்பட்டியல் முன்னால் வைக்கப்பட்டிருக்கும். குற்றம் புரிந்தோர் அவ்வேளை தமது வினைப்பட்டியலில் உள்ளவற்றைக் கண்டு அஞ்சி நடுங்கிக் கொண்டிருப்பார்கள். மேலும் அவர்கள் புலம்பிக் கொண்டிருப்பார்கள்: அந்தோ! எங்களின் துர்ப்பாக்கியமே! இது என்ன பதிவேடு? எங்களின் செயல் - சிறிதோ பெரிதோ எதையும் பதிவு செய்யாமல் இது விட்டு வைக்க வில்லையே என்று!" (18:49)

இன்னாரின் மகளாகிய இன்ன பெண்ணுடைய தீய நடத்தையாகும் இது என்று பகிரங்மாக அறிவிக்கப்படும்போது இவளது நிலை என்னவாகும்? எல்லாப் படைப்பினங்களுக்கும் எதிரில் பெரும் கேவலமாகத்தானே முடியும்! அவளிடம் அவளுடைய இறைவன் கேள்வி - கணக்கு வாங்குவானே அந்த நேரத்தில் அவளது நிலை எத்தகைய பரிதாபமாக இருக்கும்! அவள் என்னதான் பதில் சொல்வாள்? அப்பொழுது அவளுடைய கைகால்கள்கூட அவளுக்கு எதிராகச் சாட்சி சொல்லுமே! இறைவன் கூறுகிறான் :

இன்று அவர்களுடைய வாய்களுக்கு நாம் முத்திரை வைத்துவிடுவோம். (உலகில்) அவர்கள் எவற்றைச் சம்பாதித்துக் கொண்டிருந்தார்கள் என்று அவர்களின் கரங்கள் நம்மிடம் சொல்லும்., அவர்களின் கால்களும் சாட்சி பகரும்!" (36 : 65)

என் அன்புச் சகோதரியே! இவற்றையெல்லாம் நீ எப்பொழுதாவது சிந்தித்திருக்கிறாயா?

பிறகு மக்கள் எல்லோரும் நபி (ஸல்) அவர்களின் தண்ணீர் தடாகத்திற்கு (நீர் பருக) வந்து கொண்டிருக்கும் பொழுது இந்தப்பெண்ணும் தண்ணீர் அருந்த வேண்டும் என ஏங்குவாள்! ஆனால் மிகக் கேவலமாக விரட்டப்படுவாள்! ஏனெனில் அவள் தான் நபி(ஸல்) அவர்களுக்கு விருப்பமில்லாத செயலைச் செய்திருக்கிறாளே! எந்தச் செயலை விட்டு விலகி விடும்படி அவளுக்குக் கட்டளையிடப்பட்டதோ அந்தச் செயலைச் செய்து விட்டாளே இவள்!

பிறகு ஸிறாத் எனும் பாலத்தைக் கடக்க வேண்டிய கட்டம் வரும்! நற்செயல்கள் செய்த அவளுடைய தோழிகள் எல்லாரும் மின்னல் வேகத்தில் அல்லது காற்றடித்தாற்போன்று கடந்து விட்டிருப்பார்கள். ஆனால் இவளோ சிறிது தூரம் நடப்பாள்., பிறகு தடுமாறி விழுவாள்!

நரகத்தின் காவலர்கள் இவளைக் கைப்பற்றுவார்கள். விபச்சாரம் செய்த ஆண்களும் பெண்களும் எரிந்து கருகும் அடுப்பில் இவளை வீசியெறிவார்கள்! இவள் தான் நேர்வழிக்குப் பகரமாக வழிகேட்டையும் மன்னிப்புக்குப் பகரமாக வேதனையையும் வாங்கிக்கொண்டாளே! இந்தப் பெண் நரக வேதனையை எவ்வாறு சகித்துக்கொள்ளப்போகிறாளோ., தெரியவில்லை! நீடித்த நிலையான சுவனத்தோட்டங்களின் விஷயத்தில் தவறிவிட்டாளே!

மாடமாளிகைகள், உல்லாச இல்லங்கள், தங்கம் - வெள்ளி மற்றும் நல்லவாழ்க்கைத் துணை, இன்பமான வாழ்வு ஆகிய வற்றையெல்லாம் இவள் தவறவிட்டு விட்டாளே!

நற்பாக்கியத்திற்குப்பதிலாக துர்ப்பாக்கியத்தையும் மன நிம்மதிக்குப் பதிலாக கஷ்டத்தையும் மகிழ்ச்சிக்குப் பதிலாக கவலையையும் (காதல் எனும் பெயரில்) கொள்முதல் செய்து கொண்டாளே இவள்!

## தடுத்து நிறுத்தும் உணர்வின்மை

மனித மனம் இருவகையானது. ஒன்று தூயமனம்., மற்றொன்று தீய மனம்! தீய மனம் என்பது இழிவான காரியங்களைச் செய்யத் தூண்டும். தூய மனம் நற்காரியங்களைச் செய்யத் தூண்டும்!

தூய மனம் ஏவுகிற நற்காரியங்கள் பயனுள்ள கல்வியும் நற்செயல்களுமாகும். தீயமனம் ஏவுகிற காரியங்கள் அறியாமையும் தீமைகளுமாகும்.

எனவே தான் இறைவனும் இறைத்தூதரும் இடும் கட்டளைகளைச் சரியாக அறியாதிருப்பது தீய காரியங்களைின் பால் இட்டுச் செல்கிறது!

ஆகையால் இளம் பெண்கள் நல்ல கல்வியைத் தேடிப் பெறுவார்களாயின் தவறான பாதையை விட்டொழித்து விடுவார்கள்! அத்துடன் ஷைத்தான்களின் வழிகளும் அடைபட்டுப்போகும்! ஏனெனில் வழிகேட்டின் காரணமே ஷைத்தான்கள்தான்!

நற்கல்வி என்பது இறையச்சத்தை ஏற்படுத்தி நற்பயனை விளைவிக்கிற ஒன்றாகும். நபித்தோழர் இப்னு மஸ்வூத்(ரலி) அவர்கள் கூறுகிறார்கள் : ’கல்வி என்பது (இறைவனுக்கு) அஞ்சுவதுதான்"

குர்ஆனில் அல்லாஹ் கூறியுள்ளான்:

அல்லாஹ்வை-அவனுடைய அடியார்களில் கல்வி கற்றோரே அஞ்சுகிறார்கள்" (35:28)

இறைவனும் அவனுடைய தூதரும் கூறியுள்ளவற்றை அறிவதே உண்மையில் கல்வியாகும்!

இந்த உண்மையான கல்வியை ஓர் இளம் பெண் அறிந்து கொள்ளும்போது -

சுவனத்தைக் குறித்து (குர்ஆனில் வந்துள்ள) வர்ணனைகளையும் அங்கே நல்ல - அழகிய தோற்றமுடைய மங்கையர் உள்ளனர்., மாளிகைகள் உள்ளன என்பதையும் எந்தக் கண்ணும் கண்டிராத எந்தக் காதும் கேட்டிராத எவரது உள்ளத்திலும் கற்பனையாகக்கூட தோன்றியிருக்காத பெரும் பெரும் அருட்பேறுகள் எல்லாம் சுவனத்தில் உள்ளன என்பதையும் அவள் அறிந்திடும் போது -

எந்தப் பெண் ஐந்து நேரத் தொழுகைளை நிறைவேற்றினாளோ, தனது வெட்கத்தலத்தைப் பாதுகாத்தாளோ, தன்னுடைய கணவனுக்குக் கீழ்ப்படிந்தாளோ அந்தப் பெண் நிச்சயம் சுவனம் புகுவாள்!" (நபிமொழி)

சுவனம் என்பது பரந்து விரிந்த - மிகவும் விசாலமான இடங்களாகும். அதன் மரங்கள் - ஸு ப்ஹானல்லாஹி வல் ஹம்துலில்லாஹி வலா இலாஹ இல்லல் லாஹு வல்லாஹு அக்பர் (பொருள்: அல்லாஹ் தூயவன் என்று துதிக்கிறேன். மேலும் எல்லாப்புகழும் அல்லாஹ்வுக்கே! மேலும் வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறில்லை., அல்லாஹ் மிக உயர்ந்தவன்)- என்கிற விதைகளால் வளர்கின்றன!,, (நபிமொழி)

‘எவர் ஹு ப்ஹானல்லஹில் அழீம் வ பி ஹம்திஹி ( பொருள் : மகத்துவமிக்க என் இறைவன் தூயவன் என்று துதிக்கிறேன்., அவனைப் புகழவும் செய்கிறேன்) என்று கூறினாரோ அவருக்கு சுவனத்தில் ஒரு பேரீத்தம் மரம் நடப்படுகிறது!" (நபிமொழி) - என்பதையெல்லாம் அறிந்து கொள்வாளாயின் -

- இந்த உலக வாழ்வு வெறும் பதர்தான் என்பதையும் வெறுமெனே உட்கார்ந்து வீணாகப் பேசிக் கொண்டிருப்பது இன்பமல்ல., இழப்புதான்., ஏனெனில் அது மறுவுலகத்தில் எந்தப் பயனும் அளிக்கப் போவதில்லை என்பதையும் உறுதியாக அறிந்திடுவாள்!

மேலும் அந்த இளம் பெண், நபித்தோழியரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைத் தெரிந்தால் நபிகளாரின் தூய மனைவியருடைய வரலாறுகளைத் தெரிந்தால் அந்த உத்தமிகளின் பயணக்குழுவில் சேர்வதில்தான் ஆவல் கொள்வாள்., அதைவிட்டும் பின்தங்கி விடாதிதிருக்க அக்கரை கொள்வாள்!

கல்வி கற்றுக் கொண்டிருக்கும் ஒரு மாணவி தம் முன்னோர்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்பதை அறிந்து கொண்டால் நபித்தோழியர் போன்ற உத்தமிகளைத்தான் பின்பற்றிட வேண்டும் என்பதை உறுதியாகத் தெரிந்து கொள்வாள்!

தங்களுடைய ஆபாச (மற்றவர்கள் மனதில் தீய உணர்வுகளை உண்டு பண்ணக்கூடிய) அழகைத் தினப்பத்திரிக்கைகளுக்கும் மாத, வார இதழ்களுக்கும் விற்கிறார்களே அத்தகைய தர்தலைகளையோ தங்களுடைய ஆபாச குரல்களைச் சினிமாக்காரர்களுக்கு விற்கிறார்களே அத்தகைய புறம்போக்குகளையோ - தங்களுடைய சிறப்பு, உன்னத வாழ்வு, தங்களது சுவனபாக்கியம் ஆகியவற்றை விற்று இவ்வுலகின் அழியும் சிற்றின்பத்தை வாங்கிக்கொள்கிறார்களே அத்தகைய பத்தாம் பசலிகளையோ பின்பற்றக் கூடாது என்பதை உறுதியாகத் தெரிந்து கொள்வாள்!

என் கண்ணியத்திற்குரியசகோதரியே! நீ பயன்மிகு கல்வியைத் தேடு! அதுவே அல்லாஹ்வின் பக்கம் உனக்கு நெருக்கத்தைத் தரும்! அவனது கோபத்தை விட்டும் உன்னைத் தூரமாக்கும்!

## ஓய்வு

என் அன்புச் சகோதரியே! காலம்தான் வாழ்க்கை! அது ஒரு வாளைப் போன்றது., நீ அதனைத் துண்டிக்க வில்லையானால் அது உன்னைத் துண்டித்து விடும்!

காலம்தான் உனது வாழ்நாள்! ஆம்! உனது வாழ்க்கையின் உண்மைநிலை யாதெனில் சில விநாடிகளும் நாழிகைகளும்தான்! உன் வாழ்நாள் காலம்தான் எனும் போழுது (குர்ஆனில்) அல்லாஹ் காலத்தின் மீது சத்தியமாக! என்று சத்தியம் செய்திருப்பது குறித்து மக்கள் ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக்கிறது!

காலத்தின் மீது சத்தியமாக! மனிதன் பெரும் நஷ்டத்தில் இருக்கிறான்!" (103:2)

-ஏனெனில் காலம் விநோதமான பலவிஷயங்களை உள்ளடக்கியுள்ளது. அதில் இன்பமும் துன்பமும் கலந்திருக்கின்றன. ஆரோக்கியத்தைப் பின் தொடர்ந்து நோயும் செழிப்பை அடுத்து வறுமையும் வருகிறது!

நீ ஆயிரம் ஆண்டுகளை வீணடித்து விடுகிறாய் என வைத்துக் கொள்! பிறகு வாழ்க்கையின் கடைசி விநாடியில் தௌபா எனும் பாவமீட்சி தேடிக் கொண்டால்தான் நீ சுவனம் செல்வாய்! அங்கு நிரந்தரமாகத் தங்கி வாழ்வாய்!

இதிலிருந்து நீ தெரிந்து கொள்ளும் உண்மை என்னவெனில், உனது வாழ்நாள் முழுவதுமே அருட் கொடைதான்! ஆயினும் உனது வாழ்வில் விலைமதிப்பு மிக்க விநாடி என்னவெனில், நீ பாவமீட்சி தேடிக் கொண்டாயே அந்த விநாடிதான்!

ஆனால் நீ பாவமீட்சி தேடிக்கொள்கிற அந்த விநாடி உனக்குக் கிடைக்கும் என்பதற்கு யார் பொறுப்பு! எனவே அந்த விநாடிக்காக நீ விரைந்து செயல்பட வேண்டும்., பாவமன்னிப்பு தேடாமலேயே உனக்கு மரணம் வந்து விடக்கூடாது!

இதனால்தான் காலத்தின் மீது சத்தியமாக என்று கடந்த காலத்தையும் உனது ஆயுளைக் குறைத்துக் கொண்டிருக்கக் கூடிய நிகழ்காலத்தையும் உள்ளடக்கிய வகையில் பொதுவாக அல்லாஹ் சத்தியம் செய்து கூறியுள்ளான். மேலும் இந்தக் காலத்திற்கு எதிரில் உன்னிடம் எந்த நற்செயலும் இல்லையானால் அது பேரிழப்பாகவே முடியும்! பிறகு அதை நிவர்த்தி செய்யவே முடியாது! இதனால்தான் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

பெரும்பாலான மக்கள் இரண்டு அருட்கொடைகளின் விஷயத்தில் ஏமாற்றத்திற்குள்ளாகிறார்கள் ஒன்று: ஆரோக்கியம். மற்றொன்று ஓய்வு." நூல்: புகாரி

மனிதன் ஆரோக்கியமாக இருப்பதுடனேயே - பணிகள் குறுக்கீடு எதுவுமின்றி ஓய்வாக இருப்பதுடனேயே தனது மறுமை வாழ்வைச் சீரமைத்துக் கொள்வதற்காக எந்த முயற்சியும் செய்யவில்லையானால் அந்த மனிதன் கொடுக்கல் - வாங்கலில் ஏமாற்றப்படுகிறவன் போலாவான்! இளமை என்பது வாழ்நாளின் ஒரு முக்கியமான காலகட்டமாகும் என்பதை நாம் அறிந்தோமானால் இவ்வுண்மையில் ஆச்சரியமோ தயக்கமோ எதுவுமில்லை!

என் அன்புச்சகோதரியே! உனது இளமைக்காலத்தை எந்தப் பணிகளில் நீ செலவு செய்தாய் என்பது பற்றி இறைவனின் முன்னிலையில் உன்னிடம் விசாரணை செய்யப்படும் என்பதையே இது உணர்த்துகிறது!

மேலும் இளமைக் காலம் தான் மனித வாழ்வின் பிரகாசமான உச்சநிலையாகும். மனிதனின் வாழ்வையும் அவனது அறிவு ஆற்றல் அனைத்தையும் ஒரு நிறைவான நிலைக்குக் கொண்டு செல்லும் காலகட்டம் இந்தப் பருவம்தான்! எனவே இத்தகைய உன் இளமைக் காலம் குறித்து நிச்சயம் உன்னிடம் கேள்வி- கணக்கு கேட்கப்பட்டே தீரும்!

ஆனால் நீயோ ஒலி - ஒளிப்பேழைகளில் மூழ்கி உனது இளமையை வீணடித்து விட்டாயே! கடை வீதிகளில் சுற்றித் திரிந்தே நாட்களைக் கழித்து விட்டாயே! இந்த ஒலி - ஒளிப் பேழைகளும் இந்தப்புதிய ஃபாஷனும் இதற்கு முன்பு உனது பழக்கத்தில் இல்லையே! உனது தாய் தந்தையரின் பழக்கங்களுக்கும் உனது தீன் - இறைமார்க்கத்தின் கண்ணியத்திற்கும் இவை முரணானவை ஆயிற்றே!

எனவே காலத்தை எப்படி மதிக்க வேண்டுமோ அப்படி மதிக்காத காரணத்தால்தான் இவ்வாறு காலத்தை வீணடித்துக் கொண்டிருக்கிறீர்கள்! மன இச்சையைப் பின்பற்றுவதிலும் இன்பம் துய்க்கும் இடங்களைத் தேடி அலைவதிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறீர்கள்!

ஒரு கவிஞர் பாடினார்:

பணியேதுமின்றி ஓய்வாய் இருப்பது - ஒரு

பணியை என்னுள் ஏற்படுத்திவிட்டது!

எல்லாத் துன்பங்களுக்கும் காரணம்

வேலை ஏதுமின்றி இருப்பதுதானே!

இன்னொருவர் பாடினார்:

இளமை, ஓய்வு, செல்வம் யாவும்

அறிவை அதிகம் திசைமாறச் செய்பவை!

சான்றோர் ஒருவர் கூறினார்: 'ஒரு மனிதன் இம்மைக்குரிய வேலையும் செய்யாமல் மறுமையின் பணிகளிலும் ஈடுபடாமல் வீண்வெட்டியாக இருப்பதைக் கண்டால் அவன் மீது எனக்குக் கோபம்தான் வருகிறது!" - முற்றிலும் உண்மையான கருத்துதானே இது!

- இதனால்தான் நான் கூறுகிறேன்: 'உலகின் ஆகுமான பணிகள் ஏதேனும் ஒன்றில் ஈடுபடாமல் வீண் வெட்டியாய் இருக்கும் பெண்ணைக் கண்டாலே நான் வெறுப்படைகிறேன்! அறிவுள்ள ஒவ்வொரு பெண்ணும் அப்படித்தான் வெறுப்பாள்!"

வீட்டு வேலைகளைக் கற்றுக் கொள்வது, குழந்தைகளை எப்படிப் பராமரிப்பது எனத் தெரிந்து கொள்வது, தேவையான சம்பாத்தியத்தில் ஈடுபடுவது, பிற பெண்களுக்கு நல்லவை போதிப்பது போன்ற பணிகள் ஒன்றில் ஈடுபடலாம்! இதே போன்று மறுமைக்குத் தேவையான பணிகளில் - எடுத்துக்காட்டாக, தொழுகை, திக்ர், குர்ஆன் ஓதுவது, நல்ல, பயன்மிக்க கேஸட்களை கேட்பது போன்ற பணிகளில் ஈடுபடலாம்! அல்லது இரத்த பந்துக்களைச் சந்திப்பதில் - இன்ன பிற பயன் மிக்க காரியங்களில் ஈடுபடலாம்! எந்தப் பணியும் செய்யாமல் வீண் வெட்டியாய் இருக்கும் பெண்களால் என்ன பயன்?

என் அன்புச் சகோதரியே! காலம் என்பது உனது வாழ்நாள்தான்! எனவே அதனை எந்தப் பணிகளில் செலவு செய்திட வேண்டும் என்பதுபற்றி நீ நன்கு சிந்தித்திட வேண்டும்!

காலம் விரைவாகக் கை நழுவிப் போக்ககூடிய ஒன்று! அதனைத் திரும்பப் பெறுவதென்பது முடியாத காரியம்! எனவே நற்செயல்களில் நேரத்தைச் செவு செய்வதன் மூலம் காலத்திற்கு மதிப்பளித்திடு!

ஓர் அரபிக் கவிஞர் மிக அழகாகப் பாடினார்:

பேணிடத்தக்க பெருட்களிலே

பெரும் மதிப்புமிக்கது காலம்தான்!

ஆனால்

வீணாகும் பொருள்களிலே - நீ மிக

லேசாகக் கருதுவதும் காலத்தையே!

பரஸ்பரம் கூடிப்பழகி வாழ்வதை நேசிப்பவனாகவே -சமூக வாழ்வை விரும்புகிறவனாகவே மனிதன் படைக்கப்பட்டுள்ளான். அது அவனது இயல்பிலேயே அமைந்த ஒன்றாகும். இவ்வாறு யாருடன் அவன் நெருங்கிப் பழகுகிறானோ அவர்களுடைய தன்மைகளும் பண்புகளும் அவனுள்பாதிப்பை ஏற்படுத்துகின்றன!

இதனால்தான் ஒரு கவிஞர் இப்படிப் பாடினார்:

உற்றதோழராய் நீ தேர்வு செய்பவர் மூலமே

உன்னை மக்கள் எடைபோடுவர்!

எனவே

நல்லோருடன் பழகு!

நற்புகழ் - உயர்வடைவாய்!

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

ஒரு மனிதன் தன் நண்பனின் வழி எதுவோ அதன் படி நடக்கிறான்" நூல் : திர்மிதி, அபூதாவூத்

அன்புச் சகோதரியே! சேறும் சகதியும் நிறைந்த இடத்தில் அசுத்தங்களும் அழுக்காறுகளும் படிந்த, நெருக்கடியான இடத்தில் வாழ்வதற்கு நீ விரும்புவாயா? அவ்விடத்தை விட்டும் வெகு தூரம் விலகிடவே விழைவாய்! அதற்குக் காரணம், உனது உடலைத் தூய்மையாய் வைக்க வேண்டும்., கண்ணியம் காக்க வேண்டும் என்பதே! மேலும் தூய்மையையும் அழகையும் நேசிக்கும் பண்பு உனது இயல்பிலேயே அமைந்துள்ளது! கெட்ட பொருட்களை வெறுத்தொதுக்கும் தன்மை உன்னுள் இயற்கையாகவே அமைந்துள்ளது! இதேபோன்று உனது உள்ளத்தின் ஆன்மாவின் இயல்பு யாதெனில், நற்செயலையும் நல்லபேச்சையும் நற்குணத்தையும் விரும்புவதேயாகும்! தீய பேச்சையும் தீய குணத்தையும் அது விரும்புவதில்லை! மனிதனின் உள்ளம் பொதுவாக அவன் யாருடன் பழகுகிறானோ அவரது பழக்கத்தை அது கவர்ந்து விடுகிறது!

நீ தரங்கெட்ட ஒரு பெண்ணுடன் நட்பு கொண்டு பழகினால் உனது இயல்பை எதிர்மறையான நிலைக்குத்தான் அந்நட்பு இழுத்துச் செல்லும்! அந்தப்பெண் உனது தூய்மையான ஆன்மாவைக் கெடுத்து விடுவாள்! உனது ஆன்மா சாத்தானியக் குணம் கொண்டதாக மாறிவிடும்!

அந்நிய ஆடவர்களுடன் பழகும் ஒரு பெண்ணுடன் நீ நட்பு கொண்டால் டெலிஃபான் பைத்தியம் பிடித்த பெண்ணுடன் நீ பழகினால் பாவத்தைத் துச்சமாகக் கருதும் பெண்ணுடன் நீ பழகினால் நீயும் கெட்டுப்போய் விடுவாய்! பிறகு நீயும் பாவங்களில் மூழ்குவதைச் சர்வ சாதாரண விஷயமாகத்தான் கருதத் தலைப்படுவாய்!

இதைப்போல் இன்னும் பல பழக்கங்கள் உள்ளன., அவை உன்னைத் தூய்மை எனும் கடலில் இருந்து வெளியேற்றி இழிவு எனும் சாக்கடையில் கொண்டு வந்து தள்ளிவிடும்!

இதனால்தான் ஒரு பெண், யாருடன் தோழமை கொண்டு பழகுகிறாளோ அவர்களைக் கொண்டே மதிப்பிடப்படுகிறாள்., அறியப்படுகிறாள்!

எடுத்துக்காட்டாக, நீ உன் சகோதரனுக்குப் ஒரு பெண்ணை நிச்சயதார்த்தம் செய்ய விரும்புகிறாய்., அதற்காக அந்தப் பெண்ணைப் பற்றி விசாரிக்க நாடுகிறாயெனில் அவளுடைய தோழிகளைப் பற்றித்தான்

விசாரிப்பாய்! அவர்கள் கெட்டதொடர்பு உடையவர்களாய் -தீய குணமுடையவர்களாய் இருந்தால் அந்தப் பெண்ணை நீ மறுத்துவிடுயாய்! உன் சகோதரனின் பிள்ளைகளுக்கு அவள் தாயாக வருவதை நீ விரும்பமாட்டாய்!

இவ்வாறுதான் உனது நடத்தையும் கண்காணிக்கப்படுகிறது!

எனவே இத்தகைய பிணியுற்றவர்களுடன் கலந்துற வாடுவதை விட்டு விலகிவிடு! அவர்கள் உன்னையும் பிணிக்குள்ளாக்கி விடுவார்கள். அதன் பிறகு நீ அழிந்தே போய்விடுவாய்! அவர்களின் கூடா நட்பினால் படிப்படியாக இழிவின் நரக நெருப்பில் சென்று வீழ்ந்து விடுவாய்! அது மிகவும் கெட்ட இருப்பிடமாகும்!

எனவே அன்புச் சகோதரியே! உனக்கு அழகு சேர்ப்பது இந்த வரிகள்தாம்!

ஒருவனின் தனிமை - அவனுடன் தீய நண்பன்

இருப்பதைவிட சிறந்தது!

நல்லதோழனுடன் இருப்பது தனிமையைவிடச்

சிறந்தது!

## தூண் - உறுதுணைப் பொருள்

ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு தூண் (உறுதுணைப் பொருள்) உண்டு. உன் உடலுக்கு உறுதுணை உனது முதுகெலும்பு! உங்கள் குடும்பத்திற்கு முதுகெலும்பு உங்கள் தந்தை., அல்லது அவர் சார்பான பிரதிநிதி! உனது பள்ளிக்கூடம் இயங்குவதற்கு உறுதுணை அதனை நிர்வகிக்கும் ஆசிரியை!

இவ்வாறே இன்னும் பல பொருள்கள்! அவை ஒவ்வொன்றுக்கும் உறுதுணையாக வேறொன்றுண்டு! நீ குடியிருக்கும் வீட்டுக்கு உறுதுணை அதன் அஸ்திவாரத் தூண்கள்! நீ தங்கியிருக்கும் கூடாரத்திற்கு உறுதுணை அதன் முளைகள்!

அதே நேரத்தில் - அன்புச் சகோதரியே! நீ என்றாவது சிந்தித்துப் பார்த்தாயா? உனது நல்வாழ்வுக்கு - நற்பேற்றிற்கு உறுதுணை எது? அந்த உறுதுணை உனது ஜீவனை - கோணலாகிவிடாதவாறு செம்மைப் படுத்த வேண்டும்., உனது உள்ளத்தை உயர்வு நோக்கிக் கொண்டு செல்ல வேண்டும்., இழிகுணங்களை நோக்கிச் சரிந்திடாதவாறு அதனைப் பாதுகாக்க வேண்டும்., என்றென்னும் வான விதானத்தில் உயர்ந்து நின்று பிரகாசித்துக் கொண்டிருக்குமாறு அதனைச் செய்திட வேண்டும்! இத்தகைய நிலைக்கு உன்னைக் கொண்டு சேர்க்கக்கூடிய அந்த உறுதுணை எது தெரியுமா? அதுதான் தொழுகை!

மன நிம்மதி - மனத்தெளிவு எனும் பாக்கியத்திலுள்ள மறைவான இரகசியம்தான் தொழுகை!

இதயத்தைப் பீடிக்கும் பிணிகளுக்கெல்லாம் அருமருந்தாகவும் நிவாரணியாகவும் திகழ்வதுதான் தொழுகை!

நபி (ஸல்) அவர்கள் அருளியது போன்று - தீன் - இறைமார்க்கத்தின் தூணே தொழுகை!

திண்ணமாக தொழுகை உன்னை(வானவர்களெனும்) மேலுலகத் தினருடன் சேர்த்துவைக்கிறது! கீழ் உலகத்தில் இருந்து உன்னை உயரே கொண்டு செல்கிறது!

அன்புச் சகோதரியே! தொழுகையில் - உன்னைப் படைத்த எஜமானனாகிய இறைவனுடன் நீ உரையாடுகிறாய்!

இந்தத் தொழுகை உன்னுடைய உறுப்புகளை அவற்றின் செயல்பாடுகளைச் செம்மைப்படுத்துகிறது! ஏனெனில் உறுப்புகள் சீரடைவது உள்ளத்தின் சீர் நிலையைப் பொறுத்தது! உள்ளத்தின் சீர்நிலை தொழுகையில் உள்ளது!

உன்னைப் படைத்த இறைவனுடனான உரையாடலாய்த் தொழுகை திகழ்கிறது! மொழிபெயர்ப்பாளரின் உதவியின்றியே!

தொழுகையில் - உன்னைப் படைத்த அதிபதியை நோக்கி நீ உனது முகத்தை முன்னோக்கச் செய்துள்ளாய்!

ஆகையால் தொழுகையை நீ பேணுதலுடன் கடைப்பிடித்து நற்பாக்கியம் பெற்றிடு! ஏக இறைவனை வணங்கி வழிபடுவதன் மூலம் கண்ணியத்திற்குரியவளாய்த் திகழ்ந்திடு!

இறைவன் மீது சத்தியமாக! வாழ்க்கையில் இப்படி சில விநாடிகள் உள்ளன., வாழ்நாளில் (தொழுகைக்காக - வணக்க வழிபாட்டிற்காகச் செலவாகிற) அந்த விநாடிகள் மிகவும் மதிப்பு வாய்ந்த - நற்பேறுமிக்க விநாடிகளாகும்!

எனவே உனக்கு மட்டுமல்ல - என்னைப் பொறுத்தும் கூட நபியவர்கள் நவின்ற ஒரு பொன்மொழியைக் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்!

பிலால் (ரலி) அவர்களை நோக்கி நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'பிலாலே! தொழுகை (க்கு பாங்கு கொடுப்பதன்) மூலம் எங்களுக்கு மன நிம்மதி தருவீராக!"

அன்புச் சகோதரியே! தொழுகையின் மூலம் நாம் மனநிம்மதி பெற்றிட வேண்டும். இறைவனை அஞ்சிய வண்ணம் இயலாமையை வெளிப்படுத்தும் இதயத்துடன் - பணிவடக்கம் கொண்ட உறுப்புகளுடன் இறைவனைத் தொழுதிட வேண்டும். தொடர்ந்து அதனை நிறைவேற்றி வர வேண்டும்!

ஏனெனில் எவர் தொழுகையைச் சரியாகக் கடைப்பிடித்து வருகிறாரோ அவரை வேதனைப் படுத்துவதில்லை., தண்டிப்பதில்லை என்று அல்லாஹ் வாக்குறுதி அளித்துள்ளான்!

தொழுகையைச் சரியாகப் பேணி வருவதென்பது அதை நேரப்படி நிறைவேற்றுவதாகும்! இறைவன் கூறுகிறான்:

திண்ணமாகத் தொழுகை மானக்கேடான மற்றும் தீய செயல்களை விட்டும் தடுக்கிறது!" (29:45)

வேறோர் இடத்தில்,

இறைநம்பிக்கைகொண்டோரே! தொழுகை மற்றும் பொறுமை யின் மூலம் உதவி தேடுங்கள். திண் ணமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கிறான்" (2:153)

கண்ணியமிகு சகோதரியே! பறவை பகல் வேளைகளில் இரை தேடிக்கிளம்புகிறதெனில் மாலைநேரத்தில் அது கூட்டிற்குத் திரும்புவது அவசியம்! அந்தப் பறவை தனது கூட்டிற்கு வந்து அமைதி பெறுகிறது! ஆனந்தம் கொள்கிறது!

இதே அடிப்படையில் எல்லாப் படைப்பினமும் - தனது நிலை கொள்ளும் இடத்திற்குத் திரும்பவே விரும்புகிறது!

அப்படி ஓர் இடம் இல்லாத நிலையை வெறுக்கிறது. தன்னைப் போன்றதொரு கூட்டாளி தனக்கு இருக்க வேண்டும்., அதனிடம் அடைக்கலம் புகவேண்டும் என்பதே ஒவ்வொரு படைப்பினத்தின் நாட்டமாகும்!

இது போன்றே தனக்கொரு துணை வேண்டும்., அதனிடம் அடைக்கலம் புகவேண்டும் என விரும்புவது மனித இயல்பாகும். அந்தத் துணையை நினைப்பது கொண்டும் அதனுடைய பேச்சுக்கள் - கற்பனைகளைக்கொண்டும் மன அமைதி அடைய மனிதன் விரும்புகிறான்.

ஆகையால்,

அன்புச் சகோதரியே! டெலிபோனில் பேசிக் கொண்டிருக்கும் மேற்படிப் பழக்கம் நம்முடைய இளம் பெண்களிடம் ஏற்பட என்ன காரணம்? என்னென்ன விதிமுறைகளைப் பேணும்படி நமக்குக் கட்டளையிடப்பட்டுள்ளதோ அவற்றை அவர்கள் மீறுவதற்கு என்ன காரணம்? திருமணமின்றி இருப்பதும் குடும்ப வாழ்க்கையை விட்டு விலகிச்செல்லும் போக்கும்தான் காரணம்!

இந்தப் போக்கு சரிதான் என்பதற்கு அப்படி இப்படி என்று வீணான பல வாதங்களும் ஷைத்தானியக் கற்பனைகளும் முன் வைக்கப்படுகின்றன!

என் அன்புச் சகோதரியே! திருமணம் என்பது ஓர் உண்மை நிலையாகும். அது ஒரு பொற்கூடமாகும்!

உனக்கென ஓர் ஆண் துணை (கணவன்) இருக்கும் பொழுது - அவன் உனக்கென்றே அர்ப்பணமாகி விடும்பொழுது - உன்னைத் தவிர வேறு யாருக்கும் அவன் எஜமானன் அல்லன் எனும் போது நீ விரும்பும் போதெல்லாம் அவனிடம் இருந்து மகிழ்வைப் பெற்றுக் கொள்ளலாம்! உனக்கு ஏதேனும் தேவைப்படும்போது அது பற்றி அவன் உன்னிடம் ஆலோசனை கேட்டுச் செயல்படுவான்!

என் அன்புக்குரியவளே! இந்த உலக வாழ்க்கையில் திருமணம் தான் உண்மையான மகிழ்ச்சியாகும். எனவே தான் அண்ணல் நபி(ஸல்) அவர்கள் இவ்வாறு அருளினார்கள்., அந்த அருளுரைக்கு ஏற்ப அனைத்திலும் சிறந்த- மதிப்பு வாய்ந்த மகிழ்ச்சிக்குரிய பொருளாக நீ திகழ்கிறாய்! நபியவர்கள் கூறினார்கள் :

இவ்வுலகில் உள்ள அனைத்தும் அனுபவித்து மகிழ்வதற்குரியவையே! அவற்றுள் சிறந்தது நல்லொழுக்கமுள்ள மனைவி ஆவாள்!" (அறிவிப்பு: இப்னுஉமர் (ரலி) நூல் : முஸ்லிம்)

எனவே அன்புச் சகோதரியே! நீ இந்த விஷயத்தில் தயக்கம் காட்டக்கூடாது. யாரேனும் ஒருவர் உன்னைத் திருமணம் செய்து கொள்ள வருவாராயின் - அவரது மார்க்கப் பற்றும் நம்பிக்கை நாணயமும் உனக்குப் பிடித்திருந்தால் அவரைக் துணைவராக ஏற்றுக்கொள்! உனது மகிழ்ச்சிகரமான வாழ்க்கைக்கு அவருடன் சேர்ந்து அடித்தளம் அமைத்துக் கொள்!

இன்னும் இரண்டு மூன்று வருடங்கள் போகட்டும், படிப்பை முடித்துக் கொள்ளலாம் என்பது போன்ற வீணான சாக்குப் போக்குகளை ஒதுக்கித் தள்ளிவிடு! ஏனெனில் திருமணம் படிப்புக்குத் தடையாக இருக்கப் போவதில்லை! அதற்கு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தித்தரக்கூடிய ஒன்று தான் அது!

எனவே எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் நீ திருமணம் செய்து கொள்ளவேண்டும். ஒன்றை நினைவில் கொள்! இருபத்தைந்து வயது வரைக்கும் தான் திருமணத்திற்கென நிச்சயதார்த்தம் செய்ய மக்கள் உன்னைத் தேடி வருவார்கள். அதன் பிறகு நீ தான் தேடிச் செல்ல வேண்டும்!

எனவே மனித இயல்பின் இந்த அழைப்புக்கு விரைந்து பதில் அளி! இதில் தாமதம் செய்யாதே! ஏனெனில் தனி வாழ்க்கை என்பது தீமையும் குழப்பமும் பெரும் சீர்கேடும்தான்!

குர்ஆனில் இறைவன் கூறுகிறான்:

மேலும் அவனுடைய (இறைவனுடைய) சான்றுகளில் ஒன்று: அவன் உங்களுக்காக உங்கள் இனத்திலிருந்தே மனைவியரைப் படைத்தான்., நீங்கள் அவர்களிடம் அமைதி பெற வேண்டும் என்பதற்காக! மேலும் உங்களிடையே அன்பையும் கருணையையும் தோற்றுவித்தான்!'' (30:21)

ஆம்! இது உனக்கு இறைவனுடைய ஓர் அத்தாட்சியாகும். அதாவது, இறைவன் உனக்காக ஓர் ஆண் மகனைக் கணவராகப் படைத்தான். நீ அவரிடம் மன அமைதி பெறும் வகையில் அமைத்தான்!

எனவே இறையச்சம் உடைய ஒருவர் உன்னை மணம்புரிய நாடி வந்தால் அவர் எப்படிப்பட்டவராக இருக்கிறார்., உன் மீது அவர் அன்பு செலுத்தினால் உனக்குக் கண்ணியம் அளிப்பார்., உன் மீது அவர் கோபம் கொண்டால் உன்னைக் கேவலப் படுத்திட மாட்டார் எனில், இப்படிப்பட்டவரை நீ கணவராக ஏற்றுக் கொள்! வீணாப்போனவர்களிடம் பழகுவதை நீ விட்டு விடு! அவர்கள் தங்களது வாழ்க்கையில் துர்ப்பாக்கிய சாலிகளாவர்! இந்த ஆசாமிகள் தங்களைப் போன்றே பிறரையும் அழிவுப் படுகுழியில் தள்ளிவிடப் பார்க்கிறார்கள்!

நான் அவளை நோக்கித் திரும்பினேன். கூறினேன்: 'அன்புச் சகோதரியே! நான் அதிகநேரம் பேசிக் கொண்டிருந்து விட்டேன். நான் உனக்குத் தொல்லை கொடுத்து விட்டேன் எனக் கருதுகிறேன். நீ இதனைப் பொறுத்துக் கொள்ள வேண்டுகிறேன். ஆயினும் இறைவன் மீது சத்தியமாக! நான் கூறிய இந்த விஷயம் உண்மையானதாகும்!''

உடனே அவள் எனது பேச்சை இடைமறித்துக் கூறினாள்:

'டீச்சர்! நான் உங்களுடன் பேசிக் கொண்டிருந்த நேரம் அனைத்தும் பயனுள்ள வகையில் கழிந்தது! எல்லாவும் தூக்கத்தில் கனவு கண்டது போலுள்ளது!''

உங்களது அறிவுரை பெரும் அறியாமையில் இருந்த என்னை விழித்தெழச் செய்துவிட்டது! அல்லாஹ்வின் மீது சத்தியமாக! உங்களுடைய வார்த்தைகள் எனது பதற்றத்தைப் போக்கக் கூடியவை! நிவாரணம் அளிக்கக்கூடியவை!,,

எதிர்காலத்தில் இது போன்ற செயல்களில் ஈடுபடக் கூடாதென நான் உறுதிகொண்டுள்ளேன். நான் எனது பாவச்செயலை முற்றாக விட்டுவிடுகிறேன். என்னைப் படைத்துப்பரிபாலிக்கும் இறைவன் பக்கம் மீளுகிறேன்!,,

'ஆனால் ஒரு பயம் என்னைப் பிடித்தாட்டுகிறது!'' என்றாள். 'என்ன அது?'' என்றேன். அவள் சொன்னாள்:

'நானும் அவனும் உரையாடிப் பதிவு செய்த கேசட் பல அவனிடம் உள்ளன., அவற்றை அம்பலப்படுத்துவதாகச் சொல்லி என்னை மிரட்டுவானே என்று தான் எனக்குப் பயமாக இருக்கிது! நான் என்ன செய்வது டீச்சர்?''

அவளிடம் நான் கூறினேன்: ’என் அன்புச் சகோதரியே! நீ கவலையே படவேண்டாம்! நீ தௌபா பாமன்னிப்புத் தேடி மனம் வருந்தி அல்லாஹ்வின் பக்கம் திரும்பி விட்டபோது நீ அல்லாஹ்வின் பாதுகாப்பில் - அவனது கண்காணிப்பின் கீழ் வந்துவிட்டாய்! அவன் உன்னை ஒருபோதும் ஏமாற்றத்திற்குள்ளாக்க மாட்டான்!

அந்த மனிதனாலோ இன்ன பிற மனிதர்களாலோ உனக்கு எந்த விதத்திலும் தீங்கு அளித்திட முடியாது! இறைவன் குர்ஆனில் கூறியுள்ள இந்த வசனத்தை என்றென்றும் நீ நினைவில் வைத்துக் கொள்!

எவர்கள் இறைநம்பிக்கை கொண்டார்களோ அவர்களுக்குத் திண்ணமாக அல்லாஹ் பாதுகாப்பு அளிக்கிறான் ... " (22:38)

எனவே இறைவன் உன் சார்பாக பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்வான். அந்த மனிதனுக்கு எதிராக உனக்கு உதவி புரிவான்!

என் அன்புச் சகோதரியே! நீ அதிகமாகப் பிரார்த்தனை செய்து வர வேண்டியது அவசியம்! உன்னுடைய அதிபதியாகிய இறைவன் முன்னிலையில் மன ஒருமையுடன் பணிந்து நில்! இறைவன் அந்த மனிதனை இழிவுபடுத்தி உன்னை விட்டும் தடுத்திட வேண்டும் என இறைஞ்சிடு!

ஆனால் என் அன்புக்குரியவளே! ஒரு நிபந்தனை: தௌபா எனும் பாவமீட்சியை வாய்மையான உள்ளத்தோடு செய்திட வேண்டும் அதனை உண்மைப்படுத்தும் வகையில் தொடர்ந்து நற்செயல்கள் ஆற்றிவர வேண்டும். செய்த பாவத்தை எண்ணி மனம் வருந்த வேண்டும்., இனி ஒரு பொழுதும் இது போன்ற பாவத்தை செய்வதில்லை என்று உறுதி கொள்ள வேண்டும். இப்படிச் செய்வது ஒரு பாதுகாப்பு அரணை உனக்கு நல்கும். தீய எண்ணத்தோடு உன்னை நெருங்குவதற்கு இனி எவனுக்கும் துணிவு வராது!

ஆகையால் நம்மைப் படைத்துப் பரிபாலிக்கும் இறைவனுக்குக் கீழ்ப்படிவதில் விரைவாகச் செயல்படு!

ஏனெனில் இது இறைவனின் கட்டளையாகும்:

இறைநம்பிக்கை கொண்டவர்களே! இறைவனுக்கும் அவனுடைய தூதருக்கும் பதில் அளியுங்கள் - உங்களுக்கு வாழ்வளிக்கக்கூடிய பணியின் பக்கம் தூதர் உங்களை அழைத்திடும்போது!" (8:24)

ஆம்! இறைவனுடையவும் அவன் தூதருடையவும் கட்டளைக்குக் கீழ்ப்படிவதில்தான் வாழ்வு இருக்கிறது!

என் அன்புச் சகோதரியே! நான் உன்னிடம் அதிக நேரம் பேசிக் கொண்டிருந்தது குறித்து மனம் வருந்துகிறேன். வெறுப்புக்குரிய பேச்சுகளிலிருந்து அல்லாஹ் நம் அனைவரையும் பாதுகாப்பானாக! சந்தேகமின்றி அவன் அனைத்தையும் செவியுறுபவனாகவும் பிரார்த்தனையை ஏற்றுக் கொள்பவனாகவும் இருக்கிறான்.